செ.வெ.எண்.10 தேதி : 17.04.2021

# அரியலூர் மாவட்டம்

# கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (17.02.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களை கண்டறியும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பரிசோதனைகள் குறித்தும், பரிசோதனை மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் தொடர்புடைய நபர்களுக்கும் பரிசோதனை மேற்கொண்டு தொற்றாளர்களை விரைந்து கண்டறியும் நடவடிக்கைகள் குறித்தும், கொரோனா வைரஸ் நோய் தொற்றாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்தும், இச்சிகிச்சை மையத்தில் தேவையான அடிப்படை வசதிகளான கழிப்பிடம், குடிநீர் வசதி, மின்வசதி உள்ளிட்டவைகளுடன் மருத்துவ உபகரணங்கள் இருப்பு மற்றும் தேவைகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நபர்களின் இருப்பிடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பரிசோதனைகள் குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், மேற்கண்ட பகுதிகளில் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்வது குறித்தும், தடைசெய்யப்பட்ட பகுதிகளில் வாழும் பிற பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் கிடைப்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் 25.03.2021 முதல் தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமலில் இருந்து வருகிறது.

தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிகரித்து வரும் சூழ்நிலையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், முககவசம் அணிதல், சமூக இடைவெளியினை பின்பற்றுதல் மற்றும் சோப்பு போட்டு கைக்கழுவுதல் உள்ளிட்ட நடைமுறைகளை பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளான மேற்காணும் செயல்களில் கடைபிடிக்காதவர்களிடம் வருவாய்த்துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பொது சுகாதாரத்துறையின் மூலமாக அபராதம் விதித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களை விரைவாக கண்டறியும் வகையில் RTPCR சோதனைகளை அதிகப்படுத்தவும், தடுப்பூசி போடுவதை மேலும் விரிவுபடுத்தவும் மாவட்ட நிர்வாகம் தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones) வசிக்கும் மக்கள், இந்தப் பகுதிகளிலிருந்து வெளியில் வராத வகையில், காவல் துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுகாதாரத் துறை ஊழியர்களைக் கொண்டு 24 மணி நேரமும் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. இந்த பகுதிகளில் கிருமிநாசினிகள் தெளித்தல் உள்ளிட்ட நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதோடு, நோய்த் கட்டுப்பாட்டு பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, பொதுமக்கள் நோய்த் தொற்று அறிகுறி இருந்தால் தாமதமின்றி உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனையை அணுக வேண்டும். இதனை கடைப்பிடித்து. கோவிட் நோய்த் தொற்று பரவாமல் இருக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பூங்கோதை, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) இளவரசன், கோட்டாட்சியர்கள் ஏழுமலை (அரியலூர்), அமர்நாத் (உடையார்பாளையம்) மற்றும் மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.**